MAY 2023 **P/ID 35319/PTL2J**

Time : Three hours Maximum : 80 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

எவையேனும் பத்து வினாக்களுக்கு முறையே
50 சொற்களில் விடையெழுதுக

1. புலம் என்றால் என்ன?

2. அரிசுடாட்டில் எம் மொழியினர்?

3. இலக்கியக்கலை என்னும் நூலின் ஆசிரியர் யார்?

4. முருகியல் என்பது யாது?

5. மதுரைக்காஞ்சி – பொருள் விளக்கம் தருக.

6. அகஇலக்கிய உரிப்பொருள் பற்றி எழுதுக.

7. எண் வகை வனப்புகள் யாவை?

8. 'நமக்குத் தொழில் கவிதை' என்று முழங்கிய தமிழ்ப் பாவலர் யார்?

9. விமர்சனம் என்னும் சொல்லைத் தமிழில் முதலில் பயன்படுத்தியவர் எவர்?

10. சீவகசிந்தாமணியின் வேறு பெயர்கள் யாவை?

11. புனைகதை – பொருளுரைக்க.

12. க. கைலாசபதியை அறிமுகப்படுத்துக.

பகுதி ஆ — ($5 \times 6 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு, முறையே 250 சொற்களில் விடையெழுதுக

13. இலக்கியம் – சொற்பொருள் கூறுக.

14. நூல் நயத்தோடு ஒப்பிட்டு, திருக்குறள் கூறுவது யாது?

15. சொற்பொருளியல் (SEMANTICS) விளக்கம் குறித்து எழுதுக.

16. அன்பொடு புணர்ந்த ஐந்திணை – விளக்குக.

17. படைப்பாளர் பிறக்கிறாரா? உருவாகிறாரா? – விவாதிக்க.

18. திறனாய்வின் வகைகளைப் பட்டியலிடுக.

19. சங்கப் பாக்களில் காணலாகும் வீரயுகப் பண்புகளை எடுத்துரைக்க.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு முறையே
500 சொற்களில் விடையெழுதுக

20. தொல்காப்பியச் செய்யுளியல் சுட்டும் செய்யுள் உறுப்புகளைப் பட்டியலிடுக.

21. மனிதனின் சிந்தனை, உணர்ச்சி ஆகியவற்றின் வெளிப்பாடாக இலக்கியம் அமையுமாற்றைத் தெளிவுறுத்துக.

22. இலக்கியத்தில் அற நெறி தேவையா? ஆராய்க.

23. இலக்கியத்தின் திறன்களைக் கண்டறிதல் எங்ஙனம்?

24. புனைகதை இலக்கியக் கொள்கைகளைப் பட்டியலிடுக.

———————